# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## செய்திக்குறிப்பு

2015-2016 ஆண்டுக்கான, தமிழ்நாடு பொதுப் பணிகளில் அடங்கிய குற்ற வழக்கு தொடர்வுத் துறைக்கான உதவி குற்றவியல் அரசு வழக்குரைஞர், நிலை - II பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வுக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள், சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்காக 21.02.2019 முதல் 28.02.2019 அன்று மாலை 5.30 மணிக்கு முன்னர் தங்களது மூலச் சான்றிதழ்களை **(Original Certificates)** ஸ்கேன்(Scan) செய்து தேர்வாணைய இணைய தளத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் நடத்தும் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்களை மேற்குறிப்பிட்ட நாளுக்குள் பதிவேற்றம் செய்யவில்லை எனில் அவ்விண்ணப்பதாரர்களுக்கு முதன்மை எழுத்துத் தேர்வில் **(Main Written Examination)** கலந்து கொள்ள விருப்பமில்லை எனக் கருதி அவர்களது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் முதனிலை எழுத்துத் தேர்விற்கு **(Preliminary Examination)** தேர்வு கட்டண விலக்கு கோராத விண்ணப்பதாரர்கள் அனைவரும் முதன்மைத் தேர்வுக்கான தேர்வுக் கட்டணம் ரூ.**200/-** (**ரூபாய் இருநூறு** மட்டும்) அரசுப்பணியாளர் தேர்வாணைய இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 28.02.2019 க்கு முன்னர் கண்டிப்பாக செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய விண்ணப்பதாரர்கள் கட்டணம் செலுத்திய பின்னரே அவர்கள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரா.சுதன்,இ.ஆ.ப.,
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்.